தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 170 | 4 Pages | 17.1.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 170 | 4 பக்கங்கள் | 17.1.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்**
**புணரின் வெகுளாமை நன்று**

**விளக்கம்:** பலச் சுடர்களை உடைய பெரு நெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவன் செய்த போதிலும் கூடுமானால் அவன்மேல்சினங்கொள்ளாதிருத்தல்நல்லது.

## ரஷியா: ராணுவ தளங்கள் மீது உக்ரைன் தாக்குதல்




கியேவ், ஜன.17

ரஷியாவின் ராணுவ தளங்கள் (ராணுவத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் இடங்கள்) மீது மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது

நேட்டோ அமைப்பு நாடுகளில் உக்ரைன் இணையக்கூடாது என்பதற்காக, அதன் அண்டை நாடான ரஷ்யா, கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி 24ஆம் தேதி முதல் அந்நாட்டின் மீது போர் தொடுத்து வருகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் நிதி உதவி மற்றும் ஆயுத உதவி அளித்து வருவதால், உக்ரைனும் ரஷ்யாவுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் உக்ரைன் மீது ரஷியாவும், ரஷியா மீது உக்ரைனும் தாக்குதல் நடத்துவது வாடிக்கையாகிவிட்டது. சுமார் 3 ஆண்டுகளாக இந்த பரஸ்பர தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் நேற்று ரஷியாவின் ராணுவ தளங்கள் (ராணுவத்திற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் இடங்கள்) மீது மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.200 கி.மீ. முதல் 1100 கி.மீ. வரை ரஷியாவின் உட்பகுதியில் தாக்குதல் நடத்தியுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இதையடுத்து பிரையன்ஸ்க், சரடோவ், டுலா மாகாணங்களில் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளது. சரடோவ் மாகாணத்தில் உள்ள ஏங்கல்ஸ் என்ற இடத்தில் உள்ள எண்ணெய் சேகரித்து வைக்கும் கிரிஸ்டால் நிலையம் மீது தாக்குதல். பிரையன்ஸ்க் மாகணத்தின் செல்ட்சோவில் உள்ள லைப்ஸ்டைல் தொழில்நுட்பம் பிரையன்ஸ்க் கெமிக்கல் நிலையம் மீது தாக்குதல் (இது ராக்கெட், குண்டுகள் தயாரிப்பதற்கான வெடிப்பொருட்களை தயாரிக்கும் வசதி கொண்ட நிலையம்)சரடோவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையம், கசனோர்க்சின்டெஸ் நிலையம் ஆகியவற்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ரஷிய ராணுவ வசதிகள் அழிக்கப்படுவது தொடர்கிறது. உக்ரைனுக்கு மகிமை எனத் தெரிவித்துள்ளது.

## வங்காளதேச பணமோசடி விசாரணை; இங்கிலாந்து பெண் மந்திரி பதவி விலகல்



லண்டன், ஜன.17

இங்கிலாந்தில் பிரதமர் கீர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சி செய்து வருகிறது. அவருடைய அரசில் லஞ்ச ஒழிப்பு துறை மந்திரியாக இருந்தவர் துலிப் சித்திக் (வயது 42). இந்நிலையில், அவர் பதவியில் இருந்து விலகியுள்ளார்.

வங்காளதேச முன்னாள் பிரதமரான ஷேக்ஹசீனாவின்(வயது77)மருமகளான சித்திக், வங்காளதேசத்தில் நடந்து வரும் நிதி மோசடி தொடர்பானவிசாரணையில் சேர்க்கப்பட்டு உள்ளார். இதனால், அவரிடம் விசாரணை நடைபெற உள்ளது. இது இங்கிலாந்து பிரதமருக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு ஜூலை முதல் தொடர்ந்து நடந்த மாணவர் போராட்டம் வன்முறையாக உருவெடுத்தது. இதில், 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து, வங்காளதேசத்தில் இருந்து தப்பிய ஹசீனா, பின்னர் ஆகஸ்டு 5ந்தேதி இந்தியாவிற்கு வந்து தஞ்சமடைந்து உள்ளார்.

இந்நிலையில், சித்திக் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக பதிவில், தனிப்பட்ட முறையில் நடந்த மறுஆய்வில், நான் மந்திரிக்கான நடைமுறையை மீறவில்லை என உறுதி செய்யப்பட்டு உள்ளது. நான் முறைகேடாக நடந்து கொண்டேன் என்பதற்கான எந்தவித சான்றும் இல்லை.

எனினும், அரசுக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக நான் மந்திரி பதவியில் இருந்து விலகியுள்ளேன் என தெரிவித்து உள்ளார். அவர் பதவி விலகியது பற்றி பிரதமருக்கு விரிவான விளக்கத்துடன் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். தேசத்தின் புதுப்பொலிவு மற்றும் உருமாற்றம் ஆகியவற்றுக்காக அரசுக்கு விசுவாசத்துடன் செயல்படுவேன் என்றும் அவர் வலியுறுத்தி கூறியுள்ளார்.

## இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல்

டெல் அவிவ், ஜன.17

ஹமாசுக்கு எதிராக கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் முதல் காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்துள்ளது. இதில் ஹமாசுக்கு ஆதரவாக ஏமனை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு பதிலடியாக இஸ்ரேல், அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் இணைந்து ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து வான் தாக்குதல் நடத்தின. தலைநகர் சனாவில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் எந்த நேரத்திலும் பதிலடி கொடுக்கக்கூடும்எனஎதிர்பார்க்கப்பட்டது.அதன்படியேநேற்றுஇஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். குறிப்பாக டெல் அவிவில் உள்ள இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகத்தின் மீது ஒலியை விட வேகமாக செல்லும் ஏவுகணைகளை வீசி தாக்கினர்.

இஸ்ரேலின் ஏவுகணை இடைமறிப்பு அமைப்பால் இதை தடுக்க முடியவில்லை என ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர். 12 மணி நேரத்தில் நடந்த 3வது தாக்குதல் இதுவாகும். முன்னதாக மேலும் 2 முறை மத்திய இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசியதாக ஹவுதி அறிவித்தது. இஸ்ரேலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியதால் நாடு முழுவதும் பெரும் பதற்றம் நிலவி வருகிறது.

# ஜல்லிக்கட்டில் உயிரிழந்த மாடுபிடி வீரரின் குடும்பத்தினருக்கு நிவாரணம்: முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஜன.17

அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் உயிரிழந்த மாடுபிடி வீரர்நவீன்குமார்குடும்பத்தினருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவித்துள்ளார். இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

மதுரை மாவட்டம், அவனியாபுரத்தில் நேற்று (14.01.2025) நடைபெற்ற ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மதுரை மாவட்டம்,மதுரைவடக்குவட்டம், விளாங்குடியைச்சேர்ந்தநவீன்குமார் என்ற மாடுபிடி வீரர், மாடு முட்டியதில் காயமடைந்து உடனடியாக சிகிச்சைக்காக




மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும்

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும். அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு. உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாய் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரபல ரவுடி பாம் சரவணன் துப்பாக்கி முனையில் கைது

சென்னை, ஜன.17

சென்னையில் படுகொலை செய்யப்பட்ட பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங்கின் தீவிர ஆதரவாளராக செயல்பட்டு வந்தவர், பிரபல ரவுடி 'பாம்' சரவணன் ஆவார். ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்டவுடன் 'பாம்' சரவணன் சென்னையில் இருந்து தலைமறைவானார். அவர் மீது 6 கொலைவழக்குகள் உள்பட 33 வழக்குகள் உள்ளன.

கே.கே.நகர் போலீஸ் நிலையத்தில் பிடிவாரண்ட் நிலுவையில் உள்ளது. திருவள்ளூர் மாவட்டம் செவ்வாய்ப்பேட்டை போலீஸ் நிலையத்தில் இவருக்கு பிடிவாரண்ட் நிலுவையில் இருந்தது. புளியந்தோப்பு போலீசாரும் இவரை கைது செய்ய தேடி வந்தனர். இந்த நிலையில் சென்னை போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவின்பேரில் சென்னை ரவுடி ஒழிப்பு போலீசார்அவரைடெல்லி உள்பட இடங்களில் தேடி வந்தனர்.



'பாம்' சரவணன் ஆந்திராவில் பதுங்கி இருக்கும் தகவல் கிடைத்தது. அதன்பேரில் தனிப்படை போலீசார் ஆந்திரா சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அவரை துப்பாக்கிமுனையில் கைது செய்தனர்.ஆந்திராவில் இருந்து அவரை தனிப்படை போலீசார் அழைத்து வந்த நிலையில் போலீசாரின் பிடியில் இருந்து தப்பி ஓட முயன்றார். இதனால் பாம் சரவணனை போலீசார் சுட்டுப்பிடித்தனர். இதில் காலில் காயம் அடைந்த பாம் சரவணன் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மக்களின் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் இந்த செய்தி மிக நன்றாக வெளிப்படுத்துகிறது. பொங்கல் போன்ற பண்டிகை

தென்காசி, ஜன.17

மக்களின் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் இந்த செய்தி மிக நன்றாக வெளிப்படுத்துகிறது. பொங்கல்போன்ற பண்டிகை நாட்களில் மக்கள் தலைவர்கள் மற்றும் கட்சி மாவட்ட செயலாளர்கள் செய்யும் சேவைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

முன்னாள் மாவட்ட செயலாளர் பொ.சிவ பத்மநாதன் M.A., B.L., தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியாரின் வழிகாட்டுதலின் கீழ், மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்பட்டு வருவது மக்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கையையும் ஆதரவையும் உருவாக்கியுள்ளது.

"மீண்டு வருக, மீண்டும் வருக"



என்ற கோசம் முன்னாள் மாவட்ட செயலாளர் அவர்கள் மீதான மக்களின் ஆழ்ந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் தெளிவாகக் காட்டுகிறது. இந்த உணர்வுகள், மக்களிடையே உற்சாகத்தை பரப்புவதோடு மட்டுமல்லாது, சமூக நலனுக்கான செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் உதவுகின்றன.

தங்கள் செயல்பாடுகள் தொடர்ந்து வெற்றியடைய வாழ்த்துக்கள்! "மீண்டும் வருவோம்!" என்ற வெற்றி முழக்கத்துடன் அவர்கள் ஊக்கமுடன் சென்று வருவதை நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறோம்....

## சென்னை மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கத்தின் ரூ.100 கோடி மதிப்பிலான அசையா சொத்துக்கள் முடக்கம்

சென்னை, ஜன.17

அ.தி.மு.க.வில் அமைச்சராக இருந்தவர் வைத்திலிங்கம். இவர் முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா அமைச்சரவையில் வீட்டு வசதித்துறை அமைச்சராக செயல்பட்டார். வைத்திலிங்கம் தற்போது ஓ.பன்னீர் செல்வம் அணியில் இருந்து வருகிறார். கடந்த 2011 முதல் 2016 ம் ஆண்டு வரை அவர் அமைச்சராக இருந்தபோது, குடியிருப்புகள் கட்ட தனியார் நிறுவனத்திற்கு அனுமதி வழங்க ரூ.27.90 கோடி லஞ்சம் பெற்றதாக புகார் எழுந்தது. மேலும் அவர் தனது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகவும் புகார் எழுந்தது. இதுதொடர்பாக தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இத ற்கிடையே சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பான விவகா ரத்தில் அமலாக்க த்துறை உள்ளே வந்தது. வைத்திலிங்கம் மீது அமலாக்கத்துறை தனியே வழக்குப்பதிவு செய்தது. கடந்த 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் வைத்திலிங்கத்தின் வீடு அலுவலகங்களில் அமலாக்கத்துறை தீவிரவாக சோதனை மேற்கொண்டது. மொத்தம் 10 இடங்களில் சோதனை நடந்தது. இந்த சோதனையின்போது சில முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில், பண மோசடிதடுப்புச் சட்டத்தின் கீழ் வைத்திலிங்கத்துக்கு சொந்தமான ரூ.100.92 கோடி மதிப்புள்ள 2 அசையா சொத்துகள் சென்னை மண்டல அமலாக்கத்துறையால் முடக்கப்பட்டுள்ளது. இதனை அமலாக்கத்துறை தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

## சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும் பேரறிவால் பொலிகிறார் வள்ளுவர்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு

சென்னை, ஜன.17

தமிழ்நாடு முழுவதும் திருவள்ளுவர் தினம் இன்று கொண்டாடப்பட்டு வரும் நிலையில் தமிழக அரசியல்வாதிகள் மற்றும் திரையுலக பிரபலங்கள் திருவள்ளுவர் தின வாழ்த்துக்களை தங்களது சமூக வலைதள பக்கங்களில் தெரிவித்து வந்தனர். இந்நிலையில் பிரபல மணற் சிற்பக்கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒடிசாவின் புரி கடற்கரையில் படைத்த திருவள்ளுவர் மணற் சிற்பத்தின் படத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பகிர்ந்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது: சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும் பேரறிவால் பொலிகிறார்அய்யன்வள்ளுவர்.. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லார் கீழல் லவர். இவ்வாறு அதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு: நாளை டாஸ்மாக் கடைகள் மூடப்படும்: மாவட்ட கலெக்டர் அறிவிப்பு

மதுரை, ஜன.17

உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு நாளை நடைபெறுவதையொட்டி அந்த பகுதியில் இயங்கி வரும் மதுபானக் கடைகள் அடைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக அம்மாவட்ட கலெக்டர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் பகுதியில் எதிர்வரும் 16.01.2025 அன்று ஜல்லிக்கட்டு விழா நடைபெறுதையொட்டி அப்பகுதியில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பொருட்டு அலங்காநல்லூர் பகுதியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில வாணிய கழக மதுபான சில்லரை விற்பனை கடைகள் (FL1) மற்றும் மனமகிழ் மன்றங்களை (FL2) 16.01.2025 ஒரு நாள் மட்டும் மூடப்பட்டு இருக்கும். மேற்படி தினத்தில் மதுபான சில்லரை விற்பனை எதுவும் நடைபெறாது என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# திருவள்ளுவருக்கு காவி உடை அணிவித்ததை ஏற்க முடியாது செல்வப்பெருந்தகை

சென்னை, ஜன.17

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு சார்பில் திருவள்ளுவர் தினம், ஆண்டுதோறும் ஜனவரி மாதம் பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடப்படுகிறது.

இந்தாண்டு (15.01.2025) திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது.

கவர்னர் மாளிகையில் நடந்த திருவள்ளுவர் தின விழாவில் காவி உடையில் திருவள்ளுவர் படத்திற்கு மலர்தூவி மரியாதை செய்திருக்கிறார். அய்யன் திருவள்ளுவருக்கு சாதி, மொழி, மதம் என்பது கிடையாது. அவருக்கு காவி உடை அணிந்து, சித்தரிப்பது ஏற்க முடியாது. கவர்னர் ரவி, அரசு அங்கீகரித்த திருவள்ளுவர் படத்தை மாற்றி, சாதி, மத, சமயம் சார்ந்து வெளியிடுவது சட்டத்துக்கு புறம்பானது. சட்டத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கும் கவர்னரே இப்படி செய்வது கண்டனத்துக்குரியது. வருத்தத்துக்குரியது.

தமிழ்நாடு அரசை மட்டுமல்ல, தமிழனத்தையும், திருவள்ளுவரையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் கவர்னரை மத்திய அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாலமேடு ஜல்லிக்கட்டு நிறைவு 14 காளைகளை அடக்கிய வீரருக்கு முதல் பரிசு



மதுரை, ஜன.17

மதுரை பாலமேட்டில் பிரசித்தி பெற்ற ஜல்லிக்கட்டு போட்டி இன்று காலை தொடங்கியது. வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்ட காளைகளை மாடுபிடி வீரர்கள் உற்சாகமாக அடக்கினர்.

காலை 7.30 மணியளவில் தொடங்கிய ஜல்லிக்கட்டு போட்டி மாலை 5.40மணியளவில் நிறைவு பெற்றது. மொத்த 10 சுற்றுகள் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில், நேரமின்மை காரணமாக 9 சுற்றுகளாக குறைக்கப்பட்டது. இதில் சுமார் 930 காளைகள் களம் கண்டன.

இந்நிலையில், இன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில், நத்தத்தை சேர்ந்த மாடுபிடி வீரர் பார்த்திபன் 14 காளைகளை அடக்கி முதல் பரிசை தட்டிச் சென்றார். அவருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டது. மஞ்சம்பட்டி துளசிராம் 12 காளைகளை அடக்கி 2வது இடத்தை பிடித்தார். பொதும்புவை சேர்ந்த பிரபாகரன் 11 காளைகளை அடக்கி 3வது இடத்தை பிடித்தார்.

இன்றைய போட்டியில் மாடுபிடி வீரர்கள் 24 பேர், மாட்டின் உரிமையாளர்கள் 15 பேர் மற்றும் பார்வையாளர்கள் 13 பேர் என மொத்தம் 52 பேர் காயம் அடைந்துள்ளனர். முதல் பரிசு வென்ற வீரர் பார்த்திபன் மயக்கமடைந்ததால் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# ரெயில்வே அமைச்சகமும், மந்திரியும் இனியாவது உண்மையை பேச முன் வர வேண்டும்: சு.வெங்கடேசன் எம்.பி. பேச்சு




மதுரை, ஜன.17

மதுரை எம்.பி. சு.வெங்கடேசன் தனது எக்ஸ் வலைதளத்தில், "மதுரை தூத்துக்குடி திட்டம் பற்றி செய்தியாளர் கேள்வி, மந்திரியின் காதில் சரியாக விழவில்லை என ரெயில்வே நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. மந்திரியின் அபத்தமான பதிலை கண்டித்து எல்லோரும் சொன்ன கருத்துகள் ரெயில்வே நிர்வாகத்தின் காதில் விழ ஏன் ஐந்து நாட்கள் ஆனது..?

"தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு துரோகமும், தமிழ்நாட்டின் செய்தியாளர்கள் மீது பழியும்" சுமத்தும் இரட்டை வழி அணுகுமுறையை ரெயில்வே நிர்வாகம் கைவிட வேண்டும்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

தனது மற்றொரு பதிவில் கூறியிருப்பதாவது:

ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பேட்டியில் மதுரை அருப்புக்கோட்டை தூத்துக்குடி புதிய பாதை திட்டத்திற்கு மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்ததால், அதை கைவிடக் கூறியதால் அது கைவிடப்பட்டது என்று செய்தியாளர்களிடம் தெரிவித்திருந்தார். கடந்த இடைக்கால பட்ஜெட்டில் 100 கோடியும் வழக்கமான பட்ஜெட்டில் 18 கோடியும் ஒதுக்கி இருப்பதை நான் ஏற்கனவே சுட்டிக்காட்டி விமர்சித்துள்ளேன். அதற்கு முழு நிதி ஒதுக்க வேண்டும் என்று கோரியுள்ளேன்.

இப்போது அந்தத் திட்டமே கைவிடப்பட்டது என்று அவர் அறிவித்தது அதிர்ச்சியை அளித்தது. அதுவும் தமிழக அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அது கைவிடப்பட்டதாக அவர் அறிவித்தார். இதற்கு தமிழக அரசு பதிலளிக்கட்டும் என்று காத்திருந்தேன். தமிழக அமைச்சரும் இந்த திட்டத்தை கைவிடச் சொல்லி தாங்கள் கூறவில்லை என்றும் ரெயில்வே மந்திரி கூறுவது பொய் என்றும் விளக்கி உள்ளார். தாங்கள் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும் என்று தான் கோரியிருந்தோம் என்று விளக்கி இருந்தார்.

இப்போது ரெயில்வே மந்திரி, "தமிழக அரசு கைவிட கோரியது தனுஷ்கோடி திட்டத்தை தான் என்றும் செய்தியாளர்களுடைய சத்தங்களால் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தனுஷ்கோடி திட்டம் தான் கேட்கிறார்கள் என்று நினைத்து தமிழக அரசு கைவிடக் கூறியதாக கூறிவிட்டதாகவும் உண்மையில் தூத்துக்குடி திட்டம் கைவிடப்படவில்லை என்றும் அதற்கு நிலம் கையகப்படுத்தும் பிரச்சனை இல்லை என்றும் இப்போது விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறியது அனைத்து ஊடகங்களிலும் ஒரே மாதிரியாக வந்துள்ள போது, சத்தத்தால் குழப்பம் ஏற்பட்டதாக மந்திரி சொல்வது ஏற்கக் கூடியதாக இல்லை.

செய்தியாளர் சந்திப்பின் காணொலியும் மிகத்தெளிவாகவே உள்ளது. மந்திரி வேண்டுமென்றே தமிழக அரசின் மீது பழிபோடவே அவ்வாறு கூறினார் என்று எண்ணத் தோன்றுகிறது. உண்மை அப்படி இருக்கும் பட்சத்தில் ஊடகங்களில் வந்த செய்தியை உடனடியாக ஏன் மறுக்கவில்லை என்ற கேள்வி எழுகிறது. எல்லா விமர்சனங்களுக்குப் பிறகு ஐந்து நாட்களுக்குப் பின் இப்போது தான் ரெயில்வே நிர்வாகம் பதில் அளித்துள்ளது.

இப்படித்தான் அவர்கள் நாடாளுமன்றத்தில் எந்த கேள்வி கேட்டாலும் அதற்கு திசை திருப்பும் பதில் அளிக்கிறார்கள். மழைக்கால கூட்டத்தொடரில் ரெயில்வே மந்திரி, அவையில் பேசிய ஆவேச பேச்சு மோசமான பதிலுக்கு நல்லதொரு உதாரணம். அதே போன்ற தொனியில் தான் தமிழ்நாடு அரசின் மீது பழி கூறிய மந்திரியின் பேச்சும்.

புதிய பாம்பன் பாலத்தின் கட்டுமானம் 30 சதம் பலமற்று இருக்கிறது என ரெயில்வே பாதுகாப்பு அமைப்பு குற்றம் சாட்டிய போது வாய்திறக்காத பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, மந்திரியின் பொய்யான தகவலை நம்பி வேகவேகமாக போராட்டத்தை அறிவித்துள்ளார். அவரை தொடர்ந்து அ.தி.மு.க.வும் போராட்டத்தை அறிவித்தது. உண்மையில் மத்திய அரசு ரெயில்வே துறையில் தமிழ்நாட்டை தொடர்ந்து எப்படி புறக்கணித்து வருகிறது என்பதை பற்றி அடிப்படை புரிதல் இருக்கும் யாரும் மந்திரியின் பேச்சு எவ்வளவு அபத்தம் என்பதை ஆராயாமலே புரிந்து கொள்ள முடியும்.

ரெயில்வே அமைச்சகமும், ரெயில்வே மந்திரியும் மக்கள் மத்தியில் உண்மையைப் பேச இனியாவது முன் வர வேண்டும். அந்த அளவு முயற்சிப்பது கடினம் என்றால் குறைந்த பட்சமாக மதுரை தூத்துக்குடி திட்டத்திற்கான நிதியையாவது வரும் பட்ஜெட்டில் போதுமான அளவு ஒதுக்கி நியாயம் வழங்க முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் சு. வெங்கடேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# கோவளம் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு தடை: அன்புமணி ராமதாஸ் வரவேற்பு

சென்னை, ஜன.17


சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கோவளம் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் கோவளத்தை மையமாக வைத்து நடத்தப்பட்டு வந்த தனியார் நிறுவனத்தின் ஹெலிகாப்டர் சுற்றுலா சேவைக்கு செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் தடை விதித்திருக்கிறார். சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கைவரவேற்கத்தக்கது.

கோவளம் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கடந்த ஓராண்டுக்கும் மேலாக வலியுறுத்தி வருகிறேன். இது தொடர்பாக கடந்த ஜனவரி மாதம் 21ஆம் நாள் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை செயலாளருக்கும் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டருக்கு நான் கடிதம் எழுதினேன், அதைத் தொடர்ந்து சில மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் சுற்றுலா சேவை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மீண்டும் தொடங்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஹெலிகாப்டர் சுற்றுலாவால் சுற்றுச்சூழல், கிழக்குக் கடற்கரைச் சாலையின் பல்வேறு பகுதிகளுக்கு வலசை வரும் பறவைகள் ஆகியவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகள், சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை சுட்டிக்காட்டி ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த செப்டம்பர் 14ஆம் தேதி அறிக்கை வெளியிட்டிருந்தேன்.

அதன் பயனாகவே சுற்றுலா பயணிகளுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பிருப்பதை காரணம் காட்டி ஹெலிகாப்டர் சுற்றுலாவை தடை செய்துள்ள செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர், அதன் கோவளம் அலுவலகத்திற்கு தடை விதித்திருக்கிறார். அந்த வகையில் இது பாட்டாளி மக்கள் கட்சிக்கு கிடைத்த வெற்றி ஆகும். ஆனால், இது போதுமானதல்ல. கிழக்குக் கடற்கடைச் சாலையில் ஹெலிகாப்டர் சுற்றுலா என்ற தத்துவத்திற்கே முடிவு கட்டினால் தான் சுற்றுச்சூழலையும், பறவைகளையும் பாதுகாக்க முடியும்.



இயற்கையின் கொடையாக, உலகப்புகழ் பெற்ற வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு இணையாக கோவளத்திற்கு அருகில் உள்ள பள்ளிக்கரணை சதுப்புநிலம், பெரும்பாக்கம் சதுப்புநிலம், சிறுதாவூர் ஏரி, நன்மங்கலம் காப்புக் காடு ஆகிய பகுதிகளும் அதிக எண்ணிக்கையில் பறவைகள் வலசை வரும் பகுதி ஆகும். இயற்கையாக நமக்கு கிடைத்த இந்த வரத்தை நாம் பாதுகாக்க வேண்டும்.

ஆனால், ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டம் இந்த வரத்தை சிதைத்துக் கொண்டிருக்கிறது. ஹெலிகாப்டர் சுற்றுலாவிற்கு இப்போது தடை விதிக்கப்பட்டிருந்தாலும் கூட, எதிர்காலத்தில் இதே நிறுவனத்திற்கோ அல்லது வேறு நிறுவனத்திற்கோ ஹெலிகாப்டர் சுற்றுலா நடத்த அனுமதி அளிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அந்த வாய்ப்புகள் அகற்றப்பட வேண்டும்.

கோவளம் பகுதியில் ஹெலிகாப்டர் சேவை செயல்படுத்தப்படுவதால், கிழக்குக் கடற்கரை சாலையில் சுற்றுலா எந்த அளவுக்கு வளர்ச்சியடையுமோ, அதை விட அதிக சுற்றுலா வளர்ச்சியை, அப்பகுதியை பாதுகாக்கப்பட்ட பறவைகள் வாழிடமாக அறிவிப்பதன் மூலம் எட்ட முடியும்.

இதைக் கருத்தில் கொண்டு கோவளம் பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் ஹெலிகாப்டர் சுற்றுலா திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அத்துடன் கிழக்குக் கடற்கரை சாலையை பாதுகாக்கப்பட்ட பறவைகள் வாழிடமாக அறிவிக்க வேண்டும்."

இவ்வாறு அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# காணும் பொங்கலை முன்னிட்டு சென்னை மாநகராட்சியில் 500 சிறப்பு பேருந்துகள்

சென்னை, ஜன.17

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை உலகதமிழர்களால் நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து இன்றைய தினம், உழவர்களுக்கு உறுதுணையாக இருந்து விவசாயத்திற்கு பேருதவி செய்யும் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இதையடுத்து நாளை காணும் பொங்கல் கொண்டாடப்பட உள்ளது. காணும் பொங்கலை முன்னிட்டு பொதுமக்கள் தங்கள் குடும்பத்துடன் சுற்றுலா தளங்கள், பூங்காக்கள், கடற்கரை உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு சென்று மகிழ்ச்சியுடன் நேரத்தை செலவிடுவார்கள்.

இந்நிலையில், காணும் பொங்கலை முன்னிட்டு நாளை சென்னையில் மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் 500 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி மெரினா கடற்கரை, மாமல்லபுரம், கோவளம், வண்டலூர், கிண்டி சிறுவர் பூங்கா உள்ளிட்ட பகுதிகளுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.




# காணும் பொங்கல்: சென்னை காமராஜர் சாலையில் செய்யப்பட்டுள்ள போக்குவரத்து மாற்றங்கள்

சென்னை, ஜன.17

சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

16.01.2025 அன்று காணும் பொங்கல் கொண்டாட்டத்தினை முன்னிட்டு சென்னையில் அனைத்து சாலைகளிலும் குறிப்பாக காமராஜர் சாலையில் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக சூழ்நிலைக்கு தகுந்தவாறு கீழ் கண்ட போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட உள்ளன.

1. காமராஜர் சாலையில் பொது மக்கள், சாலையில் அதிகமாகும் வரை எந்த வித போக்குவரத்து மாற்றமும் செய்யப்படமாட்டாது.



2. மெரினா கடற்கரைக்கு வரும் வாகனங்கள் காமராஜர் சாலையில் (மெரினா கடற்கரை சாலை) அதிகரிக்கும் போது போர்நினைவுச் சின்னத்தில் இருந்து (War Memorial) வரும் வாகனங்கள் வழக்கம் போல் கலங்கரைவிளக்கம் (Light House) நோக்கி அனுமதிக்கப்படும். கலங்கரை விளக்கத்தில் (Light House) இருந்து வரும் வாகனங்கள் கண்ணகி சிலையில் இடதுபுறமாக கட்டாயமாக திருப்பப்பட்டு (Compulsory Left Diversion), பெல்ஸ் சாலை, விக்டோரியா விடுதி வழியாக வாலாஜா சாலை சென்று தங்கள் இலக்கை அடையலாம்.

3. வாலாஜா சாலையில் இருந்து விக்டோரியா விடுதி சாலை. பெல்ஸ் சாலை நோக்கி வாகனங்கள் செல்ல தடை செய்தும், பாரதி சாலையில் இருந்து விக்டோரியா விடுதி சாலைக்கு வாகனங்கள் அனுமதிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (விக்டோரியா விடுதி சாலை ஒரு வழிப்பாதையாக மாற்றப்படும்).

4. கண்ணகி சிலையிலிருந்து பாரதி சாலையை நோக்கி செல்லும் வாகனங்கள் ஒருவழி பாதையாக செயல்படும் பெல்ஸ் சாலை, பாரதி சாலை சந்திப்பில் இருந்து கண்ணகி சிலை நோக்கி நோ என்ட்ரி ஆகவும் செயல்படும்.

5. காமராஜர் சாலையில் இருந்து கலங்கரை விளக்கம் நோக்கி வரும் கனரக மற்றும் இலகுரக சரக்கு வாகனங்கள் மதியம் 1 மணி முதல் இரவு 10 மணி வரை அனுமதிக்கப்படாது.

வாகன ஓட்டுநர்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன ரேசில் ஈடுபடவோ, நடத்தவோ கூடாது விழுப்புரம் மாவட்ட காவல்துறை எச்சரிக்கை

விழுப்புரம், ஜன.17

விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட எந்த பகுதிகளிலும் யாரும் வாகன ரேசில் ஈடுபடவோ, நடத்தவோ கூடாது என்று மாவட்ட காவல்துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொங்கல் பண்டிகையையொட்டி விழுப்புரம் ஜானகிபுரம் புறவழிச்சாலை, எல்லீஸ்சத்திரம் புறவழிச்சாலை, அண்ணாமலை ஓட்டல் புறவழிச்சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்ட விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட எப்பகுதிகளிலும் யாரும் வாகன ரேசில் ஈடுபடுவதோ நடத்துவதோ கூடாது. மீறுபவர்கள் தேசிய நெடுஞ்சாலை சட்டப்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழகத்தில் நடப்பது மக்களாட்சியா, போலீஸ் ஆட்சியா?
## அன்புமணி ராமதாஸ் கேள்வி



சென்னை, ஜன.17

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விழுப்புரம் மாவட்டம் அரசூர் கூட்டு சாலை என்றஇடத்தில்சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், காவல்துறையினரின் அத்துமீறலைக் கண்டித்து சாலை மறியல் போராட்டத்தில் இருவேல்பட்டு கிராம மக்கள் மீது காவல்துறையினர் கடுமையாக அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களை ஆண் காவலர்கள்அவமானப்படுத்தும் வகையில் இழுத்துச் சென்று அப்புறப்படுத்தியுள்ளனர். வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்களையும் காவல்துறையினர் தீவிரவாதிகளைப் போல இழுத்துக் கொண்டு சென்றுள்ளனர். காவல்துறையின் இந்த அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

உண்மையில் சாலைமறியல் செய்தவர்களை அகற்ற வேண்டும் என்பது காவல்துறையின் நோக்கம் இல்லை. மாறாக, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கடந்த சில வாரங்களுக்கு முன் அமைச்சர் பொன்முடி மீது சேறு வீசப்பட்ட கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை பழிவாங்க வேண்டும்; தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இந்த அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மக்கள் மீது ஆட்சியாளர்கள் கொண்டுள்ள வன்மத்தின் வெளிப்பாடு தான் இந்த தாக்குதலும், அவமதிப்பும் ஆகும்.

நவம்பர்திசம்பர்மாதங்களில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட இருவேல்பட்டு மற்றும் அதை சுற்றியுள்ள 18 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை என்று கூறி கடந்த திசம்பர் 3ஆம் தேதி சாலைமறியல் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுடன் பேச்சு நடத்தச் சென்ற அமைச்சர் பொன்முடி மற்றும் அதிகாரிகள் மீது சேறு வீசப்பட்டது. அதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத்தேவையில்லை என்று அமைச்சர் பொன்முடி அப்போதே கூறியிருந்தாலும் கூட அதிகாரிகள் பெயரில் புகார் அளிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அமைச்சர் பொன்முடி மீது சேறு வீசியவர்களை கைது செய்ய காவல்துறையினர் முயன்றதாகவும், அதற்காக அந்த ஊர்மக்களுக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது. அதைக் கண்டித்து தான் மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். அமைச்சர் பொன்முடி மீது சேறு வீசப்பட்டதை நியாயப்படுத்தவே முடியாது. ஆனால், தங்களை நியாயவாதிகள் என்று காட்டிக் கொள்வதற்காக, அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று வெளியில் அறிவித்து விட்டு, அதிகாரிகளின் பெயரில் புகார் கொடுத்து அவர்களை கைதுசெய்யமுயன்றதும், அதற்காக அந்த ஊர் மக்களுக்கு தொல்லை தரப்பட்டதும் தான் பிரச்சினைகளுக்கு காரணம் ஆகும்.

சாலை மறியலில் ஈடுபட்டவர்களை அப்புறப்படுத்துவதில் கூட தவறு இல்லை. ஆனால், கலைந்து சென்ற மக்களை பயங்கரவாதிகளைப் பிடிப்பதைப் போல காவல்துறையினர் வேட்டையாடியதை மன்னிக்க முடியாது. திமுகவை ஆட்சியில் அமர்த்தியவர்கள் மக்கள் தான். அவர்கள் தங்களுக்கான நீதியைக் கேட்டு போராடும் போது அமைச்சர் அவமதிக்கப்பட்டார் என்பதற்காக பல வாரங்கள் கழித்து அவர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது என்றால் ஆட்சியாளர்களின் மனதில் பழிவாங்கும் உணர்வு எந்த அளவுக்கு ஊறியிருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். இத்தகைய நிகழ்வுகளைப் பார்க்கும் போது தமிழ்நாட்டில் நடப்பது மக்களாட்சியா, போலீஸ் ஆட்சியா? என்ற ஐயம் தான் எழுகிறது. இவற்றுக்கெல்லாம் மக்கள் பாடம் புகட்டும் நாள் வெகுதொலைவில் இல்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்சி: சூரியூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்ற காளை பலி



திருச்சி, ஜன.17

தமிழகம் முழுவதும் நேற்று உற்சாகமாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது. அதேபோல் பொங்கல் பண்டிகைக்கு மறுநாளான இன்று மாட்டுப் பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. நேற்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கி வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து இன்று பாலமேடு பகுதியில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வருகிறது. இதேபோல் பல்வேறு ஊர்களில் இன்று முதல் ஒரு மாத காலம் வரை ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடர்ந்து நடைபெறுகிறது.

இதேபோல் ஒவ்வொரு ஆண்டும் மாட்டு பொங்கல் தினத்தன்று திருச்சி மாவட்டம் சூரியூரில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது வழக்கம். திருச்சி மாவட்டத்தில் நடைபெறும் இந்த ஜல்லிக்கட்டு போட்டி அங்கு மிகவும் புகழ்பெற்றதாகும். திருச்சி மட்டுமல்லாது புதுக்கோட்டை, தஞ்சாவூர், அரியலூர், கரூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து மாடுகள் சூரியூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்பதுவழக்கம்ஆகும். அதேபோல் இந்தாண்டிற்கான சூரியூர் ஜல்லிக்கட்டு போட்டி இன்று காலை தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் திருச்சி திருவளர்சோலையை சேர்ந்த அப்பு என்பவரின் காளை காயமடைந்து உயிரிழந்தது. ஜல்லிக்கட்டில் காயமடைந்த காளைக்கு கால்நடை மருத்துவர்கள் உடனடியாக சிகிச்சை அளித்த நிலையில் காளையின் உயிர் பிரிந்தது.

முன்னதாக வாடிவாசலில் இருந்து வெளியே வந்த காளையும், களத்தில் இருந்து வாடிவாசலுக்குள் திடீரென நுழைந்த காளையும் முட்டிக்கொண்டதில் திருவளர்சோலை பகுதியை சேர்ந்த காளை உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# காட்டு யானை மிதித்து முதியவர் சாவு

ஈரோடு, ஜன.17

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் உள்ள கட்டட்டி பழங்குடி கிராமத்தைச் சேர்ந்த மாதேவப்பா(65) தனது மூன்று நண்பர்களுடன் நேற்று(14.01.2025) காட்டிற்குள் விறகு சேகரிக்கச் சென்றுள்ளார். இதில் மாதேவப்பா பசுவேஸ்வரர் கோயில் பகுதிக்குச் சென்று மதியம் வரை திரும்பி வரவில்லை.

இதனால் சந்தேகமடைந்த மூவரும் அவரைத் தேடியபோது, பசுவேஸ்வரர் கோயில் சாலையில் யானை மிதித்ததில் பலத்த காயங்களுடன் மாதேவப்பா இருப்பதைக் பார்த்தவர்கள் உடனடியாக கடம்பூர் போலீசார் மற்றும் கீர்மலம் வனத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் அளித்தனர்.

இந்நிலையில் காவல்துறை மற்றும் வனத்துறையினர் குழு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மாதேவப்பாவின் உடலை மீட்டு சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். யானை மிதித்து மரணம் அடைந்ததாக காவல்துறை மற்றும் வனத்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வடலூர் சத்தியஞான சபையில் பிப்ரவரி 11ந் தேதி தைப்பூச ஜோதி தரிசனம்



வடலூர், ஜன.17

வள்ளலார் தெய்வநிலையைநிர்வாகஅதிகாரி மற்றும் அறங்காவலர்கள், குழுவினர் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வடலூரில் அருட்பிரகாச வள்ளலார் நிறுவிய சத்திய ஞான சபை உள்ளது. இங்கு ஆண்டுதோறும் தை மாதம் பூச நட்சத்திரத்தில் தைப்பூச ஜோதி தரிசனம் நடைபெறும். இந்த ஜோதி தரிசனத்தை காண திரளான பக்தர்கள் வடலூருக்கு வருவார்கள். மேலும் மாதந்தோறும் பூச நட்சத்திரத்தன்று மாதபூச ஜோதி தரிசனம் நடைபெறுவது வழக்கம்.

இந்த நிலையில் இந்தாண்டு தை மாதத்தில் வழக்கத்துக்கு மாறாக 2 பூசம் வருகிறது. இதில் இன்று (செவ்வாய்க்கிழமை) வரக்கூடிய பூசம் மாத பூசமாகும். அடுத்த மாதம் (பிப்ரவரி) 11 ந்தேதி வரக்கூடிய பூசமே தைப்பூசமாகும். முன்னதாக இந்த விழா 10ந்தேதி கொடியேற்றத்துடன் தைபூச ஜோதி தரிசனம் தொடங்குகிறது. 13 ந்தேதி வள்ளலார் சித்தி பெற்ற மேட்டுக்குப்பத்தில் திரு அறை தரிசனம் நடைபெறும். எனவே தைப்பூச ஜோதி தரிசனம் தொடர்பாக சன்மார்க்க அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் குழப்பமடைய வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: நாளை தி.மு.க. வேட்புமனு தாக்கல்




ஈரோடு, ஜன.17

கடந்த 2021ம் ஆண்டு நடந்ததேர்தலில்தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமகன்ஈவெராவெற்றி பெற்றார். அவரது மறைவுக்குப் பிறகு 2023ம் ஆண்டு பிப்ரவரி 27ம் தேதி நடந்த இடைத்தேர்தலில், தி.மு.க. கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வெற்றி பெற்றார். அவரது மறைவால் வரும் பிப்ரவரி 5ம் தேதி ஈரோடு கிழக்கில் 2வது முறையாக இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

2021 முதல் ஈரோடு கிழக்கு தொகுதியில் 2 முறை காங்கிரஸ் வெற்றி பெற்ற நிலையில், இந்த முறை ஆளும் தி.மு.க.வே களம் காண்கிறது. அ.தி.மு.க, பா.ஜ.க., தே.மு.தி.க ஆகிய கட்சிகள் இந்த இடைத்தேர்தலை புறக்கணித்துள்ள நிலையில், தி.மு.க. சார்பில் வி.சி. சந்திரகுமார் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். நாம் தமிழர் சார்பில் மா.கி. சீதாலட்சுமி போட்டியிடுகிறார்.

இந்த சூழலில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பரப்புரையை தி.மு.க. நேற்று தொடங்கி உள்ளது. இதன்படி தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் மற்றும்அமைச்சர்முத்துசாமி உள்ளிட்டோர் வீடு வீடாக சென்று வாக்குகளை சேகரித்தனர். இதனைத்தொடர்ந்து இன்று இரண்டாவது நாளாக தி.மு.க. வினர் வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட அமைச்சர் முத்துசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், "ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. அதில் 4 வார்டுகளில் நாங்கள் வாக்கு கேட்டு முடித்துள்ளோம். அங்கு தி.மு.க.வுக்கு அனைத்து மக்களும் தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

நாளை மறுநாள் பகல் 12 மணிக்கு தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார் வேட்புமனு தாக்கல் செய்வார்" என்று அவர் கூறினார்.

# மேய்ந்து கொண்டிருந்த மாட்டை அடித்து கொன்ற புலி தென்காசியில் பரபரப்பு

தென்காசி, ஜன.17

தென்காசி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள மேக்கரை, வடகரை உள்ளிட்ட பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்குள் வனவிலங்குகள் புகுந்து தொடர்ந்து பயிர்களை சேதப்படுத்தி வருவதும் ஆடு, மாடுகளை யும் வேட்டையாடும் சம்பவங்கள் சமீப காலமாக தொடர்ந்து அரங்கேறி வருகிறது.

அந்த வகையில், இதுவரை 5க்கும் மேற்பட்ட மாடுகளைபுலி மற்றும் சிறுத்தை வேட்டையாடி உள்ளது.

இந்த நிலையில், தற்போது பட்டப்பகலில் மேக்கரை பகுதியில் உள்ள ஒரு விவசாய நிலத்தில் மேய்ந்து கொண்டிருந்த மாடு ஒன்றினை புலி வேட்டையாடி உள்ளது.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த கடையநல்லூர் வனத்துறையினர் அந்த பகுதிக்கு சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்து சமீப காலமாக வனவிலங்குகளால் ஆடு, மாடு உள்ளிட்ட விலங்குகள் வேட்டையாடப்படும் சம்பவங்களும், விவசாய பயிர்கள் சேதம் அடையும் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது. இதுகுறித்து, அந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சி: வீடியோ வாகனங்கள் மூலம் நேரடி ஒளிபரப்பு

சென்னை, ஜன.17

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது;

தமிழ்நாடு முதல்அமைச்சர் உத்தரவுக்கு இணங்க தமிழ்ப் பண்பாட்டை வளர்க்கும் 'சென்னைசங்கமம் நம்ம ஊரு திருவிழா' நிகழ்ச்சி கலை பண்பாட்டுத்துறை சார்பில் கடந்த மூன்று ஆண்டுகளாக வெற்றிகரமாக நடந்து முடிந்ததையடுத்து, இந்தாண்டிற்கான சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியினை தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில் தொடங்கிவைத்தார்கள்.

சென்னையில் உள்ள 18 இடங்களில் 4 நாட்கள் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை நடைபெறும் இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நிகழ்ச்சியில் தற்போது 1500 கிராமியக்கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர். இவர்கள் 75 கலைக் குழுக்களாக பிரிந்து 50வெவ்வேறுகலை வடிவங்களை நிகழ்த்தி வருகின்றனர். சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பங்குபெறும் கிராமியக் கலைஞர்களுக்கு தங்கும் இடம், உணவு, 2 உடைகள், போக்குவரத்து வசதிகள் உட்பட அனைத்தும் தமிழ்நாடு அரசால் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இது தவிர அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு நாள் ஊதியம் ரூ.5,000/ ஆக உயர்த்தி வழங்க தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆணையிட்டுள்ளார்கள்.




செய்திமக்கள்தொடர்பு துறையின் சார்பில் 'சென்னை சங்கமம்நம்ம ஊரு திரு விழா' கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் அதிக அளவில் கண்டுகளிக்கும் வண்ணம் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள மின்னணு வீடியோ வாகனங்கள் சென்னைக்கு வரவழைக்கப்பட்டு, சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு – சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் 13.1.2025 அன்று தமிழ்நாடு முதல் அமைச்சர் தொடங்கி வைத்த நிகழ்ச்சியையும், 14.1.2025 அன்றைய கலை நிகழ்ச்சிகளையும் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, செய்தி மக்கள் தொடர்பு துறையின் மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் 15.1.2015 முதல் 17.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறும் 'சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா' கலை நிகழ்ச்சிகளை சென்னையில் மெரினா கடற்கரை, கோயம்பேடு – சென்னை புறநகர் பேருந்து நிலையம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, பொதுமக்கள் சென்னை சங்கமம்நம்ம ஊரு திரு விழா" கலை நிகழ்ச்சிகளை செய்தி மக்கள் தொடர்பு துறையின் மின்னணு வீடியோ வாகனங்கள் மூலம் மேற்கண்ட இடங்களில் நேரடியாக கண்டு களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொதிகை எக்ஸ்பிரஸ் ரெயில் மீது கல்வீச்சு

விழுப்புரம், ஜன.17

சென்னையில் இருந்து செங்கோட்டை வரை செல்லும் பொதிகை அதிவிரைவு ரெயில் நேற்று இரவு சென்னையில் இருந்து புறப்பட்டு செங்கோட்டை நோக்கி சென்று வந்து கொண்டிருந்தது. விழுப்புரம் அருகே சென்றுகொண்டிருந்தபோது ரெயிலின் பி2 ஏ.சி. பெட்டி மீது மர்ம நபர்கள் கல் வீசியுள்ளனர். இதில் ஏ.சி. பெட்டியின் ஜன்னல் கண்ணாடி உடைந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த பயணிகள் இது குறித்து ரெயில்வே நிர்வாகத்துக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து இரவு 10.50 மணிக்கு விழுப்புரம் ரெயில் நிலையத்தில் ரெயில் வந்ததும் அங்கு வந்த ரெயில்வே ஊழியர்கள் உடைந்த ஏ.சி. பெட்டியின் ஜன்னல் கண்ணாடியை தற்காலிகமாக சரி செய்தனர். இதன் பிறகு அந்த ரெயில் அங்கிருந்து சில நிமிடங்கள் தாமதமாக புறப்பட்டு சென்றது. இதனால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர். ரெயில் மீது கல்வீசியது யார் என்பது குறித்து ரெயில்வே போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை ஐ.ஐ.டி. மாணவிக்கு பாலியல் தொல்லை

சென்னை, ஜன.17

சென்னை ஐ.ஐ.டி.யில் படித்து வரும் மாணவி ஒருவர் தேநீர் கடைக்கு சென்றபோது பாலியல் தொல்லை ஏற்பட்டு உள்ளது என போலீசில் புகார் அளித்துள்ளார். அந்த மாணவி களிக்குன்றம் சாலையிலுள்ள தேநீர் கடைக்கு சென்றிருக்கிறார். அப்போது அவரிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட நபரை போலீசார் பிடித்து விசாரித்தனர்.

இதில் அந்த நபர், உத்தர பிரதேச மாநிலத்தில் இருந்து வந்தவர் என தெரிய வந்தது. அவரிடம் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆண்டு தொடக்கத்தில் மாணவி ஒருவருக்கு பாலியல் வன்கொடுமை சம்பவம் நடந்தது. இந்த பரபரப்பு அடங்குவதற்குள் பொங்கல் பண்டிகையான நேற்று புதுச்சேரியில் மற்றொரு சம்பவம் நடந்தது.

புதுச்சேரியில் உள்ள தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் ஆண் நண்பருடன் இருந்த மாணவி ஒருவருக்கு 3 பேர் கொண்ட கும்பல் ஒன்று பாலியல் தொல்லை அளித்துள்ளது. அந்த மாணவி வட மாநிலத்தில் இருந்து படிக்க வந்துள்ளார். இந்நிலையில், அவருடன் இருந்த ஆண் நண்பரை 3 பேர் கொண்ட கும்பல் விரட்டியடித்து விட்டு, மாணவியிடம் அத்துமீறியுள்ளது. அந்த 3 பேரில் ஒருவர் பல்கலைக்கழகத்தில் தற்காலிக ஊழியராக பணியாற்றி வருபவர் என கூறப்படுகிறது. இந்நிலையில், சென்னை ஐ.ஐ.டி.யில் படித்து வரும் மாணவிக்கு பாலியல் தொல்லை அளிக்கப்பட்டு உள்ளது.

# பாலமேடு ஜல்லிக்கட்டில் டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிராக பதாகை




மதுரை, ஜன.17


பொங்கல் பண்டிகை என்றால் ஜல்லிக்கட்டு போட்டியும் நமது நினைவுக்கு வருவது வழக்கம். அதிலும் குறிப்பாக மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தனி ரசிகர்கள் கூட்டமே உள்ளது.

இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை யெட்டி முதல் ஜல்லிக்கட்டு போட்டி மதுரை மாவட்டம் அவனியாபுரத்தில் நேற்று நடந்தது. விறுவிறுப்பாக நடந்த அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 19 காளைகளை அ ட ங் கி ய திருப்பரங்குன்றம் பகுதியை சேர்ந்த கார்த்தி என்பவர் முதல் இடத்தையும், 15 காளைகளை அடங்கிய குன்னத்துரை சேர்ந்த அரவிந்த் திவாகர் 2வது இடத்தையும், 14 காளைகளை அடக்கிய திருப்புவனத்தை சேர்ந்த முரளிதரன் 3வது இடத்தையும் பிடித்தனர்.

இந்தநிலையில்மாட்டு பொங்கலையொட்டி பாலமேட்டில் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஜல்லிக்கட்டு போட்டியை அமைச்சர் மூர்த்தி, மாவட்ட ஆட்சியர் சங்கீதா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். மகாலிங்க சாமி மடத்து கமிட்டி கோவில் காளை முதலில் அவிழ்த்துவிடப்பட்டது. அதனை தொடர்ந்து வாடிவாசலில் சீறி வரும் காளைகளை போட்டி போட்டு கொண்டு வீரர்கள் மடக்கி பிடித்து வருகின்றனர்.

இந்நிலையில், பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வரும் நிலையில், பார்வையாளர் மேடையில் ட ங் க் ஸ் டன் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துபதாகைகளை ஏந்தி பார்வையாளர்கள் சிலர் அமர்ந்துள்ளனர். அந்த பதாகையில், "SAVE அரிட்டாபட்டி" TUNGSTINE MINING" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணிமுத்தாறு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



நெல்லை, ஜன.17

நெல்லை மாவட்டம் அம்பை அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள மணிமுத்தாறு அருவி மிகவும் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டு முழுவதும் தண்ணீர் விழும் இந்த அருவியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்வது வழக்கம்.

இந்த நிலையில், நெல்லை மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக மணிமுத்தாறு அருவிக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க தடை விதித்து வனத்துறையினர் உத்தரவிட்டுள்ளனர். அருவியை பார்வையிடுவதற்கு மட்டும் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து சீரானதும் அருவியில் குளிக்க அனுமதி அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதைபோல தென்காசி மாவட்டத்திலும் பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது.

# மாணவியின் ஆபாச படத்தை சமூகவலைத்தளத்தில் வெளியிட்ட வாலிபர் கைது

குமரி, ஜன.17

கன்னியாகுமரி மாவட்டம் திங்கள்சந்தை அருகே உள்ள காரங்காடு புல்லுவிளை பகுதியை சேர்ந்தவர் ஷாஜின். இவர்கோவையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார். இவரது குடும்பத்தினர் தற்போது பேயன்குழியில் வசித்து வருகின்றனர். ஷாஜினுக்கு பக்கத்து ஊரை சேர்ந்த கல்லூரி மாணவி ஒருவருடன்பழக்கம் இருந்து வந்துள்ளது. இதற்கிடையே கடந்த 2022ம் ஆண்டு மாணவி பிளஸ்1 படிக்கும் போது ஷாஜின் மாணவியிடம் பணம் கேட்டுள்ளார். அதற்கு மாணவி தனது கையில் கிடந்த தங்க மோதிரத்தை கழற்றி கொடுத்துள்ளார். அந்த மோதிரத்தை ஷாஜின் அடகு வைத்து பணம் பெற்றுள்ளார். பின்னர் பல மாதங்களுக்குபின் மோதிரத்தை அந்த மாணவி ஷாஜினிடம் கேட்டுள்ளார். அப்போது மோதிரம் வீட்டில் இருக்கிறது வா தருகிறேன் என்று கூறி வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். அங்கு குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து மாணவியை பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது.

மேலும் மாணவியுடன் இருந்ததை ஷாஜின் தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்து வைத்து கொண்டார். தொடர்ந்து அந்த மாணவியிடம் அவர் எடுத்த ஆபாசபடத்தை காண்பித்து பணம் கேட்டு தொந்தரவு செய்து வந்துள்ளார். இந்நிலையில் கடைசியாக மாணவியிடம் ரூ.2 லட்சம் கேட்டுள்ளார். பணத்தை தரவில்லை என்றால் ஆபாச வீடியோவை சமூக வலைத்தளத்தில் பதிவிடுவேன் என கூறி மிரட்டியுள்ளார். இதற்கிடையே அந்த மாணவி ஆடை மாற்றும் படத்தை சமூக வலைதளத்தில் ஷாஜின் பகிர்ந்துள்ளார். இதனை பார்த்த மாணவி அதிர்ச்சியடைந்து தனது பெற்றோரிடம் விஷயத்தை கூறியுள்ளார். இதையடுத்து மாணவியின் பெற்றோர் குளச்சல் போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போக்சோ மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்துதல் ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்து ஷாஜினை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# நகை கொள்ளை வழக்கில் மகன் கைது விரக்தியில் தாய் தூக்குப்போட்டு தற்கொலை

நெல்லை, ஜன.17

நெல்லை மாவட்டம் மூலைக்கரைப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் ஆரோக்கிய ரெமன். இவர் மூலைக்கரை ப் பட்டி மெயின் பஜாரில் ஒரே கட்டிடத்தில் ஜவுளிக்கடை, பாத்திரக் கடை, நகை அடகுகடை நடத்தி வருகிறார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ந்தேதி கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றார். இதை நோட்டமிட்ட மர்மநபர்கள் கடையின் பின்பக்கத்தில் துளையிட்டு உள்ளே புகுந்து அடகுகடையில் இருந்த லாக்கரை உடைத்து அதில் இருந்த சுமார் 275 பவுன் தங்க நகைகள், ரூ.3 லட்சம் ரொக்கம் ஆகியவற்றை கொள்ளையடித்து தப்பிச்சென்றனர். இதுகுறித்த புகாரின் பேரில் மூலைக்கரைப்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து 9 தனிப்படை அமைத்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட மர்மநபர்களை தேடிவந்தனர். இந்த நிலையில் தனிப்படையினர் நடத்திய விசாரணையில் மூலைக்கரை ப் பட்டி அடுத்த முனைஞ்சிப்பட்டி அருகே உள்ள ரெட்டார்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகநயினார் மகன் ராமகிருஷ்ணன் (40 வயது) என்பவர் இந்த துணிகர கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதையடுத்து தனிப்படையினர் ரெட்டார்குளத்தில் உள்ள ராமகிருஷ்ணன் வீடு மற்றும் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தினர். அவர் அங்கு இல்லை. அவர் திருமணமாகி ஐதராபாத்தில் தனது குடும்பத்துடன் வசித்து வந்தது தெ ரி ய வ ந் த து . தொடர்ந்து தனிப்படையினர் ஐதராபாத்துக்கு விரைந்து சென்று ராமகிருஷ்ணனை கைது செய்தனர். அவரிடமிருந்து 100 பவுன் நகைகளும், ரூ.11 லட்சம் ரொக்கப்பணமும் கைப்பற்றப்பட்டது. ராமகிருஷ்ணனை போலீசார் நெல்லைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே ராமகிருஷ்ணன் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டதை அறிந்த அவரது தாயார் மீனாட்சி (62 வயது) அதிர்ச்சி அடைந்தார். மேலும் போலீசார் மீனாட்சியிடமும் விசாரணை நடத்தியதாக கூறப்படுகிறது. இதனால் விரக்தி அடைந்த மீனாட்சி வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கால்வாயில் 4 குழந்தைகளை வீசி கொன்ற தாய் மீது வழக்குப்பதிவு

பெங்களூரு, ஜன.17

கர்நாடக மாநிலம் விஜயாப்புரா மாவட்டம் கொல்ஹாரா தாலுகா தெலகி கிராமத்தை சேர்ந்தவர் நிங்கராஜ். இவரது மனைவி பாக்யா. இந்த தம்பதிக்கு தனு நிங்கராஜ்(5), ரக்ஷிதா(3), ஹசன், உசேன் என்ற 13 மாத இரட்டை ஆண் குழந்தைகள் இருந்தனர்.

கடந்த ஒரு மாதமாக தம்பதி இடையேகுடும்ப சொத்துகளை பங்கிடுவது தொடர்பாக தகராறு இருந்து வந்தது.

இ த ன ா ல் விரக்தியடைந்த பாக்யா, கடந்த 13ந் தேதி நிடகுந்தி தாலுகா பினாலே கிராமம் அலமட்டி அணை பாசன கால்வாயில் 4 குழந்தைகளை வீசி கொன்றுவிட்டு, அவரும் தற்கொலைக்கு முயன்றார். ஆனால் அதிர்ஷ்டவமாக அவர்மீட்கப்பட்டு விட்டார். 4 குழந்தைகளும் பரிதாபமாக உயிரிழந்தன. இதுகுறித்து நிங்கராஜ் மனைவி மீது நிடகுந்தி போலீசில் புகார் அளித்தார்.

ஆ ன ா ல் விசாரணையின் போது பாக்யா, கணவர் தான் குழந்தைகளை கால்வாயில் வீசி சென்றதாக கூறினார்.

இதனால் 2 பேரிடமும் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில் பாக்யா தான் குழந்தைகளை கொன்றது தெரியவந்தது.

இதையடுத்து பாக்யா மீது போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 'எமகாதகி' திரைப்படத்தின் டீசர் நாளை வெளியீடு




நடிகர்வெங்கட் ராகுல், ஒளிப்பதிவாளர்சுஜித்சாரங், எடிட்டர் ஶ்ரீஜித்சாரங் தயாரிப்பில் இயக்குநர் பெப்பின் ஜார்ஜ் ஜெயசீலன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரில்லர் திரைப்படம் 'எமகாதகி'. இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்த நிலையில் இறுதிக்கட்ட வேலைகள் பரபரப்பாக நடந்து வருகிறது. நடிகை ராஷ்மிகா மந்தனா வெளியிட்ட இப்படத்தின் பர்ஸ்ட் லுக் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது.

திரைத்துறையில் தொழில்நுட்ப கலைஞர்களாக, கலையை நேசிக்கும் உண்மையான காதலர்களாக வலம்வரும்நண்பர்கள்நடிகர்வெங்கட் ராகுல் மற்றும் ஒளிப்பதிவாளர் சுஜித்சாரங், எடிட்டர் ஶ்ரீஜித்சாரங் ஆகியோர் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளனர். திரைத்துறையில் பணியாற்றி வரும் இவர்களை கலையும் சினிமா மீதான காதலும் நண்பர்களாக இணைத்துள்ளது.

ஒரு பெண் முதன்மை நாயகியாக நடிக்கும் இப்படத்தில் ரூபா கொடுவயூர் முதன்மை பாத்திரத்தில் நடித்துள்ளார். இவர் உமா மஹேஷ்வர உக்ரா என்ற தெலுங்கு படத்தின் மூலம் சினிமா துறையில் அறிமுகமானவர். இப்படத்தில் நரேந்திர பிரசாத், கீதா கைலாசம், சுபாஷ் ராமசாமி, ஹரிதா, பொற்கொடி, ஜெய், பிரதீப், ராமசாமி ஆகியோருடன் மற்றும் பலர் இணைந்து நடித்துள்ளனர்.

தஞ்சாவூரை சுற்றிய கிராமங்களில் இப்படத்தின் முழுப்படப்பிடிப்பும் நடத்தப்பட்டுள்ளது. கிராமத்து பின்னணியில் நடக்கும், சூப்பர் நேச்சுரல் மிஸ்டரி திரில்லராக இப்படம் உருவாகியுள்ளது. இப்படத்துக்கு ஜெசின் ஜார்ஜ் இசையமைத்துள்ளார்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியாகி வைரலானது.

இந்நிலையில், 'எமகாதகி' திரைப்படத்தின் டீசர் நாளை வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# வணங்கானில் என்னை கோட்டியாக வாழ வைத்த இயக்குனர் பாலாவிற்கு நன்றி அருண் விஜய்



இயக்குனர் பாலா, அருண் விஜய் நடிப்பில் 'வணங்கான்' எனும் திரைப்படத்தை இயக்கியுள்ளார். இந்த படத்தில் நடிகர் அருண் விஜய் வித்தியாசமான தோற்றத்தில் நடித்துள்ளார். இதில் அருண் விஜய்யுடன் இணைந்து ரோஷினி பிரகாஷ், சமுத்திரக்கனி, மிஸ்கின், சாயா தேவி உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்தை வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் நிறுவனத்தின் சார்பில் சுரேஷ் காமாட்சி தயாரிக்க, ஜி.வி பிரகாஷ் இசை அமைத்துள்ளார்.

இப்படம் கடந்த 10ந் தேதி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியானது. இப்படத்தில் அருண் விஜய்யின் நடிப்பு பல சினிமா நட்சத்திரங்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இவரை தவிர்த்து படத்தில் அறிமுக நடிகைகளான ரோஷினி மற்றும் ரிதா ஆகியோர் நடிப்பும் பாராட்டப்பட்டது.

இப்படம் உலகளவில் 6 நாட்களில் ரூ. 7 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் அருண் விஜய் இயக்குநர் பாலாவிற்கு நன்றி தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றைப் பதிவிட்டிருக்கிறார். அவர் வெளியிட்டிருந்தப் பதிவில், " வணங்கானில் என்னை கோட்டியாக வாழ வைத்த என்னுடைய இயக்குநர் பாலாவிற்கு மனமார்ந்த நன்றிகள். கோட்டியாக நடிக்க வாய்ப்பு கிடைத்தது வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் அனுபவம். இந்தப் படத்தில் பேசாமலேயே மக்களின் இதயங்களை வென்றதற்கு நீங்கள்தான் காரணம். என்னால் என்ன செய்ய முடியும் என்பதை நீங்கள் எனக்கு தெரியப்படுத்தினீர்கள். இதற்காக நான் உங்களுக்கு எப்போதும் கடமைப்பட்டிருக்கிறேன். என் மனமார்ந்த நன்றி" என்று பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

# ஆக்கி இந்தியா லீக்: உ.பி. ருத்ராசை பந்தாடி 4வது வெற்றியை பதிவு செய்த பெங்கால் டைகர்ஸ்




6வது ஆக்கி இந்தியா லீக் போட்டி ஒடிசாவின் ரூர்கேலாவில் நடந்து வருகிறது. இதில் நேற்றிரவு நடந்த ஆட்டத்தில் ஷராச்சி ரார் பெங்கால் டைகர்ஸ் உ.பி. ருத்ராஸ் அணிகள் மோதின. இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பெங்கால் டைகர்ஸ் 53 என்ற கோல் கணக்கில் உ.பி. ருத்ராசை பந்தாடி 4வது வெற்றியை பதிவு செய்து அசத்தியது.

பெங்கால் டைகர்ஸ் தரப்பில் ஜுக்ராஜ் சிங் 2 கோல்களும், சுக்ஜீத் சிங், அபிஷேக் மற்றும் போக்கார்டு ஆகியோர்தலா ஒரு கோலும் அடித்தனர். உ.பி. ருத்ராஸ் தரப்பில் சாம் வார்டு 2 கோல்களும், ஹர்டிக் சிங் ஒரு கோலும் அடித்தனர். இதில் நடைபெறுகின்ற ஆட்டத்தில் டெல்லி எஸ்.ஜி. பைபர்ஸ் வேதாந்தா கலிங்கா லான்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

# சாம்பியன்ஸ் டிராபி தொடர்: பாகிஸ்தானுக்கு செல்லும் இந்திய கேப்டன் ரோகித் சர்மா..?




9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் பிப்ரவரி 19ம் தேதி முதல் மார்ச் 9ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ'பிரிவில்இந்தியா,பாகிஸ்தான்,நியூசிலாந்து, வங்காளதேசம் அணிகளும், 'பி' பிரிவில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம் பெற்றுள்ளன. பிப்ரவரி 19ந்தேதி கராச்சியில் தொடங்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தை சந்திக்கிறது.

இதில் இந்திய அணிக்குரிய ஆட்டங்களும் , முதலாவது அரையிறுதியும் துபாயில் நடைபெற உள்ளன. பாதுகாப்புஅச்சுறுத்தலால்இந்தியஅணிபாகிஸ்தானுக்குசெல்லமறுத்ததால்இந்தியஅணிக்குரியஆட்டங்கள் மட்டும் துபாய்க்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனிடையே சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான தொடக்க விழாவை பிப்.16 அல்லது 17ந்தேதி பிரமாண்டமாக நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது. மேலும் பத்திரிகையாளர் சந்திப்புக்கு முன்பாக 8 அணிகளின் கேப்டன்கள் வைத்து போட்டோவும் எடுக்க வேண்டும். ஐ.சி.சி. போட்டி நடைமுறைப்படி இவ்விரு நிகழ்ச்சிகளிலும் அனைத்து அணிகளின் கேப்டன்களும் கலந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். எனவே இந்திய கேப்டன் ரோகித் சர்மா பாகிஸ்தான் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த தொடக்க விழாவில் ரோகித் சர்மா பங்கேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# எஸ்.ஏ.20 ஓவர் லீக்: டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸை வீழ்த்திய ஜோபர்க் சூப்பர் கிங்ஸ்



ஐ.பி.எல். கிரிக்கெட் பாணியில் தென் ஆப்பிரிக்காவில் 20 ஓவர் லீக் (எஸ்.ஏ.20 ஓவர்லீக்) கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மொத்தம் 6 அணிகள் கலந்து கொண்டு விளையாடுகின்றன. இதன் 3வது சீசன் கடந்த 9ம் தேதி தொடங்கியது. இந்நிலையில், இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் ஜோபர்க் சூப்பர் கிங்ஸ் டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஜோபர்க் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 169 ரன்கள் எடுத்தது. ஜோபர்க் தரப்பில் அதிகபட்சமாக லியூஸ் டு ப்ளூய் 38 ரன்கள் எடுத்தார். டர்பன் அணி தரப்பில் சுப்ரயென், கிறிஸ் வோக்ஸ், மஹராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

தொடர்ந்து 170 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியினர், சூப்பர் கிங்ஸ் வீரர்களின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க மு டி ய ா ம ல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். இறுதியில் டர்பன் அணி 18 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 141 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 28 ரன் வித்தியாசத்தில் ஜோபர்க் அணி வெற்றி பெற்றது.

டர்பன் சூப்பர் ஜெயண்ட்ஸ் தரப்பில் அதிகபட்சமாக டிகாக் 55 ரன்னும், க்ளாசென் 29 ரன்னும் எடுத்தனர். ஜோபர்க் சூப்பர் கிங்ஸ் தரப்பில் ஜெரால்டு கோட்ஸி, டொனோவன் பெர்ரேரியா, தப்ரைஸ் ஷம்ஸி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.